1992 பிப்ரவரி 6]

திரு. எ. தெய்வநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லு கின்றபோது, விக்டர் பாலம் பழுதினைச் செப்பனிடுவதற்குக் கையாளப்படுகின்ற உத்தியைக் காட்டிலும், இந்த '' ரிங் ரோடு'' பாலம் அமைப்பதிலும், குருவிக்காரன் சாலைப் பாலம் அமைப்பதி லும் பல கோடி ரூபாய்க்கான திட்டங்களைத் திட்டமிட்டுக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், இந்த நிலை எவ்வளவு காலத்தில், செய்து முடிக்கப்படும் ; எவ்வளவு சீக்கிரத் தில் விரைவுபடுத்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, '' ரிங் ரோடு '' என்று சொல்லப்படு கின்ற '' வட்டச் சாலை '' சம்பந்தமான நடவடிக்கைகளுக்கு ஏறத்தாழ 88 இலட்சம் ரூபாய்க்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட இருக்கிறது. ஆகவே, அந்த நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட நட வடிக்கை முடிந்தவுடன், அந்த வேலை தொடங்கப்படும் என்ப தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது தவிர, இந்த 6 ½ கோடி ரூபாய் செலவிலே ஏற்படுத்தப்பட இருக்கின்ற உயர் மட்டப் பாலத்திற்கு மேற்கொள்ளப்பட்ட திட்டம் உலக வங்கி யின் நிதி உதவியோடு செயலாக்கப்பட வேண்டிய திட்டம். தமிழ்நாடு அர்பன் டெவலப்மெண்ட் ப்ராஜெக்ட் என்று சொல்லு கின்ற அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே இந்தத் திட்டம் செயலாக்கப்பட இருக்கின்ற காரணத்தினால், உலக வங்கியின் ஒப்புதலுக்காக இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டு இருக்கின்றது. அந்தத் திட்டத்தினுடைய ஒப்புதலைப் பெற்ற வுடன் இந்த அரசு அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்தப் பாலங்களை கட்டுவதற்கான நடவடிக்கையை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 71, திருமதி கே. பஞ்சவர்ணம், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

சுல்லான் ஆற்றை அழப்படுத்துதல்

—71*4207——திருமதி கே. பஞ்சவர்ணம் :-

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடைபளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், வலங்கைமான் தொகுதியில் சுல்லான் ஆற்றில் மழைக்காலத்தில் வெள்ளம் பெருக்கெடுத்து ஆயிரக்கணக் கான பயிர் நிலமும் குடியிருப்புகளும் பாதிக்கலபடுவதால் சுல்லான் ஆற்றை ஆழப்படுத்தவும், அகலப்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இத்தகைய திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

முற்பகல் 10.15

திருமதி கே. பஞ்சவர்ணம் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, சுல்லான் ஆறு என்'' 'து என்னுடைய தொகுதி

யில் முழுமையாக பாசனத்திற்குரிய ஒரு பெரிய ஆறு. மேட்டூர் டாமில் தண்ணீர் திறந்துவிட்டால் இந்த ஆற்றின் மூலம் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறக்கூடிய நிலையில் உள்ளது. அதே நேரத்தில் வெள்ளக் காலத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் உள்ள நீரை வடிக்கின்ற வடிகால் பாசனமாகவும் அதைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு மிகப்பெரிய அந்த ஆற்றில் நீண்ட நெடிய காலமாக புல்டோசர் விட்டு அடிக்காத காரணத்தால் நெய்வேலி காட்டாமணி என்ற செடி நிறைய முளைத்து அதன் இரு கரைகளும் உடைந்து பல நூற்றுக்கணக்கான ஏக்கர்கள் பாதிக்கப்படுகின்றன. பயிர்கள் சேதம் அடைகின்றன. ஆகவே அந்த ஆற்றில் உடனடியாக சீர் செய்கின்ற பணியைத் துவங்கி இரு பக்கமும் கரைகள் கட்டி, ரிவிட்மென்ட் கட்டக்கூடிய திட்டம் அரசிடம் உள்ளதா? இல்லை என்ற பதிலை நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதை மீண்டும் பரிசீலிக்கக்கூடிய நிலை இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுல்லான் ஆறு என்பது பாசனம் மற்றும் வடிகால் செய்து கொடுக்கும் ஆறு என்பதை இந்த அரசும் உணர்ந்திருக்கிறது. இதனுடைய நீளம் 30 கிலோ மீட்டர். இந்த ஆற்றின் சராசரி அகலம் 10 மீட்டர். சுல்லான் ஆற்றில் தூர் எடுக்கும் வேலையைச் செய்வதற்கு அதிகமாக நிதி தேவைப்படுகிறது. பொதுவாகவே காவிரிப் பாசனத்தைச் சீர் செய்யவேண்டும் என்பது நம்முடைய ஒப்பற்ற தலைவி புரட்சித் தலைவி அவர்களுடைய நோக்கம். அதற்கான திட்டங்கள் எல்லாம் தயாரிக்கப்பட்டு உலக வங்கி உதவிக்காக மத்திய அரசின் ஒப்புதலுக்காகக் காத்துக்கொண்டு இருக்கிறோம். ஆகவே தனிப்பட்ட முறையில் இந்த ஆற்றினை சீர் செய்வதற்கு அதிகமாக நிதி தேவைப்படுகிற காரணத்தால் இல்லை என்று நான் சொன்னேன். இருந்தாலும் இதில் உள்ள மணல் மற்றும் திட்டு மேடுகளை எல்லாம் அகற்றி பாசனப் பகுதிகளில் ஒழுங்காகப் பாசனம் நடைபெறுவதற்கும் மழைக் காலங்களில் உடைப்பு ஏற்படாமல் தடுக்கும் வண்ணமும் உரிய நடவடிக்கைகளைப் பொதுப்பணித்துறை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 72. திரு. சி. தாமோதரன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

72—

தரைமட்டப்பாலம் அமைத்தல்.

*4222.—திரு. சி. தாமோதரன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :